# VIJAYAKUMAR IAS ACADEMY

## பிப்ரவரி 2025

## CURRENT AFFAIRS

## முகவுரை


| S.NO | CONTENT | PAGE.NO |
|---|---|---|
| | **இந்தியா** | |
| 1 | BIMSTEC இளைஞர் உச்சி மாநாடு | 1 |
| 2 | பாரத் கேன்சர் ஜீனோம் அட்லஸ் | 1 |
| 3 | நக்சல் இல்லாத மாநிலம் | 1 |
| 4 | தேசிய கையெழுத்துப் பணி-2003 | 1 |
| 5 | ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் | 1 |
| 6 | தேசிய திறன் மேம்பாட்டு கழகம் | 2 |
| 7 | ஸ்வாவலம்பினி | 2 |
| 8 | ஸ்மைல்’ திட்டம் | 2 |
| 9 | WAVES SUMMIT | 2 |
| 10 | சஃபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையம் - 1994 | 2 |
| 11 | புதிய வருமான வரி மசோதா 2025 | 2 |
| 12 | அடல் பூஜல் திட்டம் | 2 |
| 13 | தென்கடற்கரை ரயில்வே மண்டலம் | 3 |
| 14 | நோடி பந்தன் திட்டம் | 3 |
| 15 | நீல்காய் விலங்கு | 3 |
| 16 | nPROUD | 3 |
| 17 | அனந்தா | 3 |
| 18 | இந்தியாவின் முதல் சாலை ரயில் | 3 |
| 19 | அகில இந்திய திருநங்கை மாநாடு | 3 |
| 20 | முதியோர் ஆணையம் | 3 |
| 21 | முதல் கடல்சார் விமான நிலையம் | 3 |
| 22 | மொழிபெயர்ப்பாளர் வசதி | 4 |
| 23 | பத்துாயிசம் | 4 |
| 24 | ஹரியானா சாட்சிகள் பாதுகாப்புத் திட்டம், 2025 | 4 |
| 25 | திரிபுவன் சகாரி பல்கலைக்கழகம் | 4 |
| 26 | இணைய முடக்கம் | 4 |
| 27 | இந்தியாவின் முதல் ஹைப்பர்லூப் | 4 |
| 28 | அம்ரித் பாரத் நிலையம் திட்டம் | 4 |
| 29 | கவாச் | 5 |
| | **தமிழ்நாடு** | |
| 1 | தமிழக காலநிலை மாற்றம் உச்சிமாநாடு 3.0 | 5 |
| 2 | தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு | 5 |
| 3 | சூரிய மின்கலம் தயாரிக்கும் செல் | 5 |
| 4 | அவசரம் 108 -செயலி | 5 |
| 5 | பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் | 5 |

| | | |
|---|---|---|
| 6 | உலகத் தமிழ் புலம்பெயர் தினம் | 6 |
| 7 | இந்தியாவின் மிகப்பெரிய பறவை பூங்கா | 6 |
| 8 | முதல்வர் மருந்தகம் திட்டம் | 6 |
| 9 | போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு செயலி | 6 |
| 10 | சிறந்த காவல் நிலையம் | 6 |
| 11 | உயர்கல்வி சேர்க்கை விகிதம் | 6 |
| 12 | பெண் சேர்க்கை விகிதம் | 6 |
| 13 | முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம் | 7 |
| 14 | டைடல் பூங்கா | 7 |
| 15 | SC/ST விவகாரங்களின் துணைத் தலைவர் | 7 |
| 16 | APPA செயலி | 7 |
| 17 | உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் | 7 |
| 18 | கனெக்டிகட், அமெரிக்கா | 7 |
| 19 | CISF ஆட்சேர்ப்பு பயிற்சி மையம் | 7 |
| 20 | கலங்கரை | 7 |
| 21 | நந்திவரம் | 8 |
| 22 | தமிழ்நாடு போலீஸ் கமிஷன் | 8 |
| 23 | ராணி மா கைடின்லியு விருது | 8 |
| 24 | சோலிகா பழங்குடியினர் | 8 |
| | **சர்வதேச நிகழ்வுகள்** | |
| 1 | எபோலா | 8 |
| 2 | திரியா நகரம் | 8 |
| 3 | 61வது முனிச் பாதுகாப்பு மாநாடு | 9 |
| 4 | வானவில் தலைநகரம் | 9 |
| 5 | 8வது இந்தியப் பெருங்கடல் மாநாடு | 9 |
| 6 | OPEC+ | 9 |
| 7 | UN மனித உரிமைகள் கவுன்சில் | 9 |
| 8 | கோல்டு கார்டு திட்டம் | 9 |
| 9 | அமெரிக்க குடியுரிமை | 9 |
| | **பொருளாதாரம்** | |
| 1 | ரெப்போ விகிதம் | 10 |
| 2 | இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) - மித்ரா | 10 |
| 3 | புதிய வருமான வரிவிதிப்பு முறை | 10 |
| 4 | வருமான வரி சீர்திருத்தங்கள் திருக்குறள் மேற்கோள் | 10 |
| | **அரசியலமைப்பு** | |
| 1 | குடியரசுத்தலைவர் ஆட்சி | 11 |
| 2 | அதிக பெண் எம்.பி. க்கள் | 11 |
| 3 | பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு குறியீட்டில் | 11 |
| 4 | தலைமைத் தேர்தல் ஆணையர் | 11 |
| 5 | லோக் ஆயுக்தாவின் தலைவர் | 11 |
| 6 | சந்திரயான் சே சுனாவோ தக்’ முயற்சி | 11 |
| 7 | தொகுதிச் சீரமைப்பு ஆணையம் | 12 |
| | **வரலாறு & பண்பாடு** | |
| 1 | வருண் சாகர் | 12 |

| | | |
|---|---|---|
| 2 | ரூபாய் நோட்டின் கருப்பொருள்கள் | 12 |
| 3 | தமிழ் மறுமலர்ச்சி தினம் | 12 |
| 4 | சிந்து சமவெளி | 13 |
| 5 | மருங்கூர் அகழாய்வுத்தளம் | 13 |
| 6 | வெம்பக்கோட்டைஅகழ்வாராய்ச்சி | 14 |
| 7 | திருவள்ளுவர் சிலை | 14 |
| 8 | வில்லியம் கோட்டை விஜய் துர்க் என மறுபெயரிடப்பட்டது | 14 |
| 9 | ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன (எஸ்என்டிபி) யோகம் | 14 |
| | **சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்** | |
| 1 | மிகப்பெரிய பச்சை அம்மோனியா ஆலை | 14 |
| 2 | இந்தியாவின் முதல் வெள்ளைப்புலி வளர்ப்பு மையம் | 14 |
| 3 | சூரிய ஆற்றல் திறன் | 14 |
| 4 | இந்தியாவில் பொட்டாஷ் வளங்கள் | 14 |
| 5 | அதிக எண்ணிக்கையிலான பறவை இனங்கள் | 14 |
| 6 | பீட்லேண்ட்ஸ் | 15 |
| 7 | CBD COP16 | 15 |
| 8 | COP 17 | 15 |
| 9 | இந்தியாவின் முதல் வனவிலங்கு உயிரி வங்கி | 15 |
| 10 | உயிரிச் சுரங்கம் | 15 |
| 11 | பருத்தி உற்பத்தித்திறனுக்கான மிஷன் | 15 |
| 12 | மீன் வளர்ப்பில் இரண்டாமிடம் | 16 |
| 13 | கொசுக்களை கட்டுப்படுத்தும் மீன்கள் | 16 |
| 14 | இந்தியாவின் இரண்டாவது பெரிய காயல் | 16 |
| 15 | ராம்சார் தளங்களில் தமிழ் நாடு முதலிடம் | 16 |
| | **அறிவியல் & தொழில்நுட்பம்பாதுகாப்பு/** | |
| 1 | மிச்சிபிகி 6 | 17 |
| 2 | EKUVERIN | 17 |
| 3 | Iskandar-1000 ஏவுகணை | 17 |
| 4 | Chang'e-8 சந்திர பயணம் | 17 |
| 5 | நிணநீர் ஃபைலேரியாசிஸ் | 17 |
| 6 | சிவசக்தி புள்ளி | 17 |
| 7 | பண்டோரா-புறக்கோள் திட்டம் | 17 |
| 8 | IRIS குறைக்கடத்தி | 18 |
| 9 | CYCLONE 2025 | 18 |
| 10 | MICROSOFT | 18 |
| 11 | Dharma Guardian exercise | 18 |
| 12 | European Space Agency | 18 |
| 13 | தென் சீனப்பெருங்கடல் | 18 |
| 14 | குவாண்டம் சிப் | 18 |
| 15 | ஜாவெலின் | 18 |
| 16 | HKU5-COV2 | 18 |
| 17 | குய்லின்-பார் நோய்க்குறி (GBS) | 18 |
| 18 | மீர்கேட் தொலைநோக்கி | 19 |

| | | |
|---|---|---|
| 19 | ஜென்காஸ்ட் | 19 |
| 20 | ஏரோ இந்தியா 2025 | 19 |
| 21 | பஞ்ச் | 19 |
| 22 | qxr, ஜென்கி | 19 |
| 23 | AMRSense-IIT டெல்லி | 19 |
| 24 | கருப்பு பிளாஸ்டிக் | 19 |
| 25 | செலினியம் | 19 |
| | **விளையாட்டு** | |
| 1 | பெண்கள் ஹாக்கி இந்தியா லீக் | 20 |
| 2 | ஆண்கள் ஹாக்கி இந்தியா லீக் | 20 |
| 3 | 2025 ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி | 20 |
| 4 | இந்திய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் | 20 |
| 5 | சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலால் (ICC) தடை செய்யப்பட்ட முதல் பெண் கிரிக்கெட் வீராங்கனை | 20 |
| 6 | மனு பாக்கருக்கு 2024 | 20 |
| 7 | டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி | 20 |
| 8 | டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி | 20 |
| | **அறிக்கைகள்** | |
| 1 | ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு | 20 |
| 2 | ஊழல் புலனாய்வு குறியீடு 2024 | 20 |
| 3 | தளவாட செயல்திறன் குறியீடு 2023 | 20 |
| 4 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | 20 |
| 5 | பூம்புகார் மாநில விருது | 20 |
| 6 | கிராமி விருது | 20 |
| 7 | வெள்ளி யானை சிலை விருது | 20 |
| 8 | இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) விருது பாலி உம்ரிகர் விருது | 20 |
| | **முக்கியமான நாட்கள்** | |
| 1 | முக்கியமான நாட்கள் | 21 |
| | **புத்தகங்கள் & விழாக்கள்** | |
| 1 | சர்வதேச புக்கர் பரிசு 2025 | 22 |
| 2 | அசாமில் நடைபெறும் திருவிழாக்கள் | 22 |
| 3 | ETERNAL | 22 |

# இந்தியா

**1.BIMSTEC இளைஞர் உச்சி மாநாடு:**

- குஜராத் மாநிலம் காந்திநகரில் முதலாவது பிம்ஸ்டெக் (பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி) இளைஞர் உச்சி மாநாட்டை இந்தியா நடத்துகிறது
- கருப்பொருள்:'பிம்ஸ்டெக் பரிமாற்றத்திற்கான பாலமாக இளைஞர்கள்'

**BIMSTEC**

- BIMSTEC (பன்முகத் துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முயற்சி) என்பது தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவை இணைக்கும் ஒரு பிராந்திய பன்முக அமைப்பாகும்.
- 1997 ஆம் ஆண்டு பாங்காக் பிரகடனத்தின் மூலம் நிறுவப்பட்ட இது, பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது.
- நாடுகள்: பங்களாதேஷ்-இந்தியா-இலங்கை-தாய்லாந்து-நேபாளம்-பூடான்-மியான்மர்

2. **பாரத் கேன்சர் ஜீனோம் அட்லஸ்**

- இந்தியாவில் புற்றுநோய் ஆராய்ச்சியை மாற்றியமைக்க ஐஐடி மெட்ராஸ் அதன் முதல் வகையான புற்றுநோய் மரபணு தரவுத்தளத்தை அறிமுகப்படுத்தியது
- நோக்கம்: புற்றுநோய் முன்னேற்றம் மற்றும் பரிணாமத்தின் மரபணு அடிப்படையிலான அறிவையும் வழங்குகிறது,

3. **நக்சல் இல்லாத மாநிலம்**

- நக்சல்கள் இல்லாத மாநிலமாக கர்நாடகா அறிவிக்கப்பட்டுள்ளது.
- நக்சலிசம் என்பது இடதுசாரி தீவிரவாதத்தின் ஒரு வடிவம் (LWE)
- நோக்கம்: மாவோயிஸ்ட் சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்ட வன்முறை வழிகளைப் பயன்படுத்தி அரசைக் கவிழ்ப் பது
- ஆரம்பம்: மேற்கு வங்கத்தில் உள்ள நக்சல்பாரி கிராமம், 1967ல் பழங்குடியினர்-விவசாயிகள் எழுச்சியாக உருவெடுத்தது.
- நக்சல் பிரச்சனைக்கு உள்துறை அமைச்சகத்தின் (MHA) பதில் 'சமதன்' நடவடிக்கை ஆகும்

4. **தேசிய கையெழுத்துப் பணி-2003**

- கையெழுத்துப் பிரதிகளில் பாதுகாக்கப்பட்ட அறிவை ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பரப்புதல்
- சுற்றுலா மற்றும் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் தொடங்கப்பட்டது

ஞான் பாரதம் மிஷன்

- ஞான் பாரதம் மிஷன்என்ற திட்டமானது கையெழுத்து பிரதிகளை பாதுகாக்க தொடங்கப்பட உள்ளது
- நோக்கம்: கல்வி நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள் மற்றும் தனியார் சேகரிப்பாளர்களிடம் உள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதி பாரம்பரியத்தின் ஆய்வு, ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை மேற்கொள்வது.

5. **ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம்**:

- ஏப்ரல் 1, 2025 முதல் மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.

- இந்தத் திட்டம் பழைய மற்றும் புதிய ஓய்வூதிய முறைகளின் அம்சங்களை ஒருங்கிணைத்து,உத்தரவாதமான ஓய்வூதியத் தொகையை வழங்குகிறது

6. **தேசிய திறன் மேம்பாட்டு கழகம்**
- உத்திரப்பிரதேச மாநிலத்தின் கிரேட்டர் நொய்டாவில் தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் சர்வதேச அகாடமியானது தொடங்கப்பட்டுள்ளது.
- NSDC (National Skill Development Corporation) தேசிய திறன் மேம்பாட்டு கழகம் – 2008

7. **ஸ்வாவலம்பினி**
- பெண்கள் தொழில் முனைவோர் திட்டம் - அஸ்ஸாம், மேகாலயா மற்றும் மிசோரம்
- கீழ்: திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் (MSDE), நிதிஆயோக்குடன் இணைந்து வழங்குகிறது

8.**ஸ்மைல்' திட்டம்:**
(வாழ்வாதாரம் மற்றும் நிறுவனத்திற்கான விளிம்புநிலை தனிநபர்களுக்கான ஆதரவு)
- பிச்சை எடுக்கும் செயலில் ஈடுபடும் நபர்களின் மறுவாழ்வு
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்
- சமீபத்தில் மத்தியப்பிரதேசத்தின் போபாலி-ல் யாசகம் செய்யவும், வழங்கவும் தடை செய்யப்பட்டுள்ளது.
- பிச்சைக்காரர்கள் இல்லா இந்தியா – 2026 இலக்கு

9. **WAVES SUMMIT (உலக ஆடியோ விஷுவல் பொழுதுபோக்கு உச்சி மாநாடு**)
- மகாராஷ்டிராவின் மும்பையில் ஊடக மற்றும் பொழுதுபோக்கு துறையின் முழு வரம்பையும் உள்ளடக்கிய முதல் உலகளாவிய உச்சி மாநாடு நடந்தது

10.**சஃபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையம் - 1994**
- சஃபாய் கரம் சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக்காலம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- சஃபாய் கரம் சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் - எம். வெங்கடேசன்

**11.*புதிய வருமான வரி மசோதா* 2025**
- *புதிய வருமான வரி மசோதா பழைய வருமான வரிச் சட்டம்* 1961 *ஐ மாற்றப் போகிறது*

12.**அடல் பூஜல் திட்டம்**
- நோக்கம்: குஜராத், ஹரியானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் போன்ற அடையாளம் காணப்பட்ட மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர் பற்றாக்குறை பகுதிகளில் நிலத்தடி நீர் வளங்களின் நிர்வாகத்தை மேம்படுத்துதல்.
- ஜல சக்தி அமைச்சகத்தின் கீழ் 25.12.2019 அன்று தொடங்கியது.

**தொடர்புடைய செய்திகள்**
- பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாயி யோஜனா:
- பண்ணைஉற்பத்தித்திறனை மேம்படுத்தவும், நாட்டின் வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதை உறுதி செய்யவும் இது 2015 இல் தொடங்கப்பட்டது.
- நோக்கம்: நீர் வீணாவதைக் குறைக்க பண்ணையில் நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்
- பாசனம் மற்றும் பிற நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களில் துல்லியமாக

இருப்பதைஏற்றுக்கொள்வதை மேம்படுத்துதல் (ஒரு துளிக்கு அதிக பயிர்)

**மழையைப் பிடி**

- தேசிய நீர் இயக்கம் (NWM), ஜல் சக்தி அமைச்சகம், நேரு யுவ கேந்திர சங்கதன் (NYKS), இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுஅமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து 'மழையைப் பிடி' விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளன.

13.**தென்கடற்கரை ரயில்வே மண்டலம்**

- ஆந்திரப்பிரதேஷ் மறுசீரமைப்பு சட்டம் 2014-ன் கீழ் விசாகப்பட்டினத்தினை தலைமையிடமாககொண்டு தென்கடற்கரை ரயில்வே மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது.

14.**நோடி பந்தன் திட்டம்**

- மேற்கு வங்க மாநிலத்தில் இயற்கை பேரிடர், நதி கரை அரிப்பு தடுத்தல், வேலை வாய்ப்பை உருவாக்க நோடி பந்தன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

15. **நீல்காய் விலங்கு**

- விவசாய நிலங்களை அழிக்கும் நீல்காய் விலங்கை கொல்வதற்கு ஹரியானா மாநில அரசு அனுமதி அளித்துள்ளது.
- ஏற்கனவே இந்த உத்தரவை பீகார் அரசு அறிவித்துள்ளது
  தொடர்புடைய செய்திகள்
- தமிழ்நாடு அரசு விவசாய நிலங்களை அழிக்கும காட்டு பன்றிகளை அழிக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

16.**nPROUD(பயன்படுத்தப்படாத மருந்துகளை அகற்றுவதற்கான புதிய திட்டம்**)

- பயன்படுத்தப்படாத மருந்துகள் வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் அல்லது நியமிக்கப்பட்ட இடங்களில் அவற்றை அப்புறப்படுத்த வசதிகள் வழங்கப்படும்.
- இது கோழிக்கோடு மாநகராட்சி மற்றும் கோழிக்கோடு மாவட்டத்தின் உள்ளியேரி பஞ்சாயத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்படுகிறது.

17.**அனந்தா**

- கர்நாடாகாவில் கூகுளின் மிகப்பெரிய வளாகமானது அனந்தா என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

18. **இந்தியாவின் முதல் சாலை ரயில்**

- இந்தியாவின் முதல் சாலை ரயில் நாக்பூர் தொடங்கப்பட்ட து

19.**அகில இந்திய திருநங்கை மாநாடு**

- ராஜஸ்தானின் அஜ்மீர் நகரில் முதல் அகில இந்திய திருநங்கை மாநாடானது நடைபெற்றது.
- தொடர்புடைய செய்திகள்
- உலக திருநங்கைகள் தினம் – மார்ச் 21
- தமிழக திருநங்கைகள் தினம் – ஏப்ரல் 15
- இந்தியாவின் முதல் திருநங்கை நலவாரியம் அமைத்துள்ள மாநிலம் – தமிழ்நாடு(15.04.2008)

20. **முதியோர் ஆணையம்**

- முதியோர் ஆணையத்தை நிறுவிய முதல் மாநிலம் -கேரளா
- கேரளா அதிக முதியோர்களைக் கொண்ட மாநிலம்
- முதியோர் தினம் - ஆகஸ்ட் 21
- சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 1

21. **முதல் கடல்சார் விமான நிலையம்**

- இந்தியாவின் முதல் கடல்சார் விமான நிலையம் மகாராஷ்டிராவில் (வாதவன் பகுதியில்) அமைக்கப்பட உள்ளது.

22. மொழிபெயர்ப்பாளர் வசதியுடன் நாட்டிலேயே முதன்முறையாக

உத்தரப் பிரதேச சட்டமன்றம் திகழ்கிறது.

23.**பத்தூயிசம்**

- அசாமின் பிடிஆர்-இல் பாத்தோயிசம் அதிகாரப்பூர்வமதமாக அங்கீகரிக்கப்பட்டது
- (போடோலாந்து பிராந்தியப் பகுதி)
- அஸ்ஸாமின் மிகப்பெரிய சமவெளிப் பழங்குடியினரான போடோக்களின் பாரம்பரிய மதம் பத்தூயிசம் ஆகும்.
- போடோ சமூகம் சீர்திருத்த இயக்கங்களை அனுபவித்திருந்தாலும், பத்தூயிசம் மூதாதையர் நம்பிக்கைகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது

24. **ஹரியானா சாட்சிகள் பாதுகாப்புத் திட்டம், 2025**

- மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்த ஒன்றியஅரசு தயாராகி வரும் நிலையில் சாட்சிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய ஹரியானா அரசின் திட்டம்
- மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டசிறைத்தண்டனை விதிக்கப்படும்வழக்குகளில் சம்பந்தப்பட்ட சாட்சிகளுக்காக இந்த திட்டம்குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பாலியல்குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (POCSO) சட்டம், 2012 இன் கீழ் உள்ள குற்றங்களும் இதில் அடங்கும்.

25.**திரிபுவன் சகாரி பல்கலைக்கழகம்:**

- இந்தியாவின் முதல் தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகம், கூட்டுறவு துறையில் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகிறது.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டது.
- இன்ஸ்டிடியூட் ஆஃப் ரூரல் மேனேஜ்மென்ட் ஆனந்த் (IRMA), குஜராத்தில் முன்மொழியப்பட்டது.
- கூட்டுறவு சங்கங்களில் நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பாத்திரங்களுக்கு திறமையான நிபுணர்களை உருவாக்குதல்.
- இந்தியா முழுவதும் தரப்படுத்தப்பட்ட கூட்டுறவு கல்வியை மேம்படுத்துதல்

26. **இணைய முடக்கம்**

- 2024 ஆம் ஆண்டில், சைபர் குற்றங்களைத் தடுக்க இந்தியாவில் 84 இணைய முடக்கம் மேற்கொள்ளப்பட்டது.
- மணிப்பூரில் அதிக எண்ணிக்கையிலான இணைய முடக்கம் (21) ஏற்பட்டுள்ளது. வலைத்தள முடக்கம் வழக்கு - அனுராதா பாசின் வழக்கு 2019(அனுராதா பாசின் vs இந்திய ஒன்றியம்)

27. **இந்தியாவின் முதல் ஹைப்பர்லூப்**

- இந்தியாவின் முதல் ஹைப்பர்லூப் சோதனைப் பாதையை ஐஐடி மெட்ராஸ் உருவாக்கியது
- TuTr ஹைப்பர்லூப் ஐஐடி மெட்ராஸில் நிறுவப்பட்ட ஒரு ஆழமான தொழில்நுட்ப முயற்சி

28.**அம்ரித் பாரத் நிலையம் திட்டம்**

- பிப்ரவரி 2023 இல் ரயில்வே அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது
- குறிக்கோள்
- இந்திய ரயில்வே அமைப்பு முழுவதும் மொத்தம் 1275 நிலையங்களை மேம்படுத்தவும் நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- நாடு முழுவதும் 1309 ரயில் நிலையங்களை மறுசீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த மறுவடிவமைப்பு நவீன பயணிகள் வசதிகளை வழங்குவதோடு, நன்கு வடிவமைக்கப்பட்ட போக்குவரத்து இயக்கம், இடை-மாதிரி ஒருங்கிணைப்பு மற்றும் பயணிகளின் வழிகாட்டுதலுக்கான அடையாளங்களை உறுதி செய்யும்.

29.**கவாச்**

- கவச் ஜூலை 2020 இல் ரயில்வே அமைச்சகத்தால் தேசிய தானியங்கி ரயில்பாதுகாப்பு அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது
- கவாச் என்பது ஒரு தானியங்கி ரயில் பாதுகாப்பு (ATP) அமைப்பாகும்
- மேதா சர்வோ டிரைவ்ஸ், கெர்னெக்ஸ் சிறிய அமைப்பு மற்றும் எச்பிஎல் ஆற்றல் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தர நிர்ணய அமைப்பு (ஆர்.டி.எஸ்.ஓ) உள்நாட்டில் உருவாக்கப்பட்டது.
- ஆரம்பத்தில் இது ரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு (TCAS) என்ற பெயரில் அறியப்பட்டது.

## தமிழ்நாடு

1. **தமிழக காலநிலை மாற்றம் உச்சிமாநாடு 3.0**

- நாட்டிலேயே முதன்முதலில் ஒரு பிரத்யேக காலநிலை மாற்ற பணியைத் தொடங்கிய மாநிலம் தமிழ்நாடு
- தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 'சுற்றுச்சூழல் கிளப்புகள்' நிறுவப்படும்.
- தமிழ்நாடு அரசு, தொழிற்சாலைகளின் பசுமை மதிப்பீடு, ஆன்லைன் கழிவு பரிமாற்ற பணியகம் மற்றும் ராஜபாளையத்தில் கார்பன் நீக்க பாதைகளுக்கான செயல் திட்டத்தை வெளியிட்டது.

2.**தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு:**

- தாமிரபரணி - கருமேனியாறு-நம்பியாறு இடை வெள்ள நீர்க் கால்வாய் இணைப்புத் திட்டம் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கனவுத் திட்டமாகும்.
- தொடங்கப்பட்டது: 2009
- நோக்கம்: திருநெல்வேலியின் வற்றாத நதியான தாமிரபரணியின் உபரி நீரை வறட்சிப் பகுதிகளுக்குத் திருப்பிவிடுதல்

3.**சூரிய மின்கலம் தயாரிக்கும் செல்**

- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்ட TP சோலார் நிறுவனத்தின் சூரிய மின்கலம் மற்றும் தொகுதி உற்பத்தி ஆலை.
- திறன்: 4.3 ஜிகாவாட்

4. **அவசரம் 108 -செயலி**

- 108 ஆம்புலன்ஸ் வாகனங்களை கண்காணிப்பதற்காக தமிழக அரசினால் அவசரம் 108 தமிழ்நாடு என்னும் செயலியை தொடங்கி உள்ளது.

5.**பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்:**

- புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பணியாளரும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்க வேண்டும் மற்றும் அரசு குறிப்பிட்ட தொகையை வழங்கலாம்.
- தொடங்கப்பட்டஆண்டு: ஏப்ரல் 1 2003

6. **உலகத் தமிழ் புலம்பெயர் தினம் - January 12**

- உலகத் தமிழ் புலம்பெயர் தினம் 2025 எத்திசையும் தமிழணங்கே என்ற கருப்பொருளுடன் சென்னையில் கொண்டாடப்பட உள்ளது.
- உலகத் தமிழ் புலம்பெயர் தினம் 2024
- கருப்பொருள்: தமிழ்வெல்லும்

7. **இந்தியாவின் மிகப்பெரிய பறவை பூங்கா**

- இந்தியாவின் மிகப்பெரிய பறவை பூங்கா திருச்சி கம்பரசம்பேட்டையில் திறக்கப்பட்டுள்ளது
- இது நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது

**நமக்கு நாமே திட்டம்:**

- டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி 1997-98 பட்ஜெட் உரையின் போது, பொதுச் சொத்துக்களை உருவாக்குவதில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் நமக்கு நாமே திட்டம் என்று அறிவித்தார்.
- கிராமப்புற சமூகத்தின் சுய உதவி மற்றும் தன்னம்பிக்கை மனப்பான்மையை ஊக்குவிப்பதையும் வலுப்படுத்துவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பணிகளுக்கான செலவில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கை பங்களிக்க ஒப்புக்கொள்வதன் மூலம் தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள், நிறுவனங்கள் அல்லது உள்ளூர் சமூகம் வேலையைத் தேர்வு செய்யலாம்.

8. **முதல்வர் மருந்தகம் திட்டம்**

- முதலமைச்சரின் மருந்தகத் திட்டம் பிப்ரவரி 24, 2025 அன்று தொடங்கப்பட்டது.
  தொடர்புடைய செய்திகள்
- அம்மா மருந்தகம் -2014
- மக்கள் மருந்தகம் 2008

9. **போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு செயலி**

- கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் புகார்கள் மற்றும் குறைகளை பதிவு செய்யவும், கடத்தல் குறித்த தகவல்களை வழங்கவும் உதவும் வகையில் 'போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு' என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியது.

10. **சிறந்த காவல் நிலையம்**

- இந்தியாவின் சிறந்த காவல் நிலையமாக திருவாரூரின் முத்துப்பேட்டை காவல் நிலையம் தேர்வாகியுள்ளது.

11.**உயர்கல்வி சேர்க்கை விகிதம்**

- தமிழ்நாடு கல்வியில் நாட்டிலேயே முன்னணியில் உள்ளது, அனைத்து நிலைகளிலும் மிக உயர்ந்த GER-ஐப் பெருமைப்படுத்துகிறது.
- அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு (AISHE) அறிக்கையின்படி, மாநிலத்தின் GER குறிப்பிடத்தக்க அளவில் 51.3% ஆக உள்ளது, இது தேசிய சராசரியான 26.3% ஐ விட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகம்.

12. **பெண் சேர்க்கை விகிதம்**

- தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேர்க்கை விகிதம் 48% உள்ள நிலையில் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை விகிதிம் 36% உள்ளது.

13. **முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்**

- முன்னாள் படைவீரர் நலனுக்காக "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும் எனவும்,

இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 சதவீதம் மூலதன மானியமும், மீதமுள்ள கடன் தொகைக்கு 3 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- அதன் படி இத்திட்டமானது 17.02.2025-ல் தொடங்கப்பட்டது.

14.**டைடல் பூங்கா**

- புதிதாக டைடல்பூங்கா மதுரை,திருச்சியில் உருவாக்கப்பட உள்ளது.
- டைடல் பூங்காக்கள் முதன்முதலில் 2000 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் எம். கருணாநிதியின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன.
- முதல் டைடல் பூங்கா சென்னையில் நிறுவப்பட்டது

15.**SC/ST விவகாரங்களின் துணைத் தலைவர்**

- எழுத்தாளர் இமயம், தமிழ்நாடு மாநில ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தலைவர்-எஸ். தமிழ்வாணன்
- பதவிக்காலம்- மூன்று ஆண்டுகள் அல்லது அவர் 75 வயதை அடையும் வரை.

16.**APPA செயலி**

- பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்திற்கு இடையேயான தகவல் தொடர்பு இடைவெளியைக் குறைக்கும் வகையில் APPA செயலியை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது, இதன் மூலம் ஒட்டுமொத்த கல்வி அனுபவத்தை மேம்படுத்துகிறது.
- அனைத்துப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கம் (APPA) செயலி தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தால் உருவாக்கப்பட்டது.

17.**உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர்**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக பாலகிருஷ்ணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- திரு. பாலகிருஷ்ணன் புத்தகம் - ஒரு நாகரிகத்தின் பயணம்: சிந்து முதல் வைகை வரை
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் – 1970
- சமீபத்திய நியமனங்கள்
- இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் – வி.ஆனந்த் நாகேஸ்வரன்

18. **கனெக்டிகட், அமெரிக்கா**

- கனெக்டிகட் அரசுடன் இணைந்து தமிழ்நாடு உற்பத்தி & உயிரியில் அறிவியல் சம்மந்தமான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

19. **CISF ஆட்சேர்ப்பு பயிற்சி மையம்**

- அரக்கோணத்தில் அமைந்துள்ள CISF ஆட்சேர்ப்பு பயிற்சி மையத்திற்கு ராஜ ஆதித்த சோழன் பெயர் சூட்டப்பட்டது.
- CISF (Central Industrial Security Force) – மத்திய தொழில் காவல்படை உருவாக்கப்பட்ட நாள்: 10.03.1969

20. **கலங்கரை**

- தமிழக அரசால் கலங்கரை என்னும் போதை ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் திறக்கப்பட்டுள்ளது.
- தொடர்புடைய செய்திகள்
- விழுதுகள் -ஒன் ஸ்டாப் சென்டர்
- நோக்கம்:மாற்றுத்திறனாளிகளுக்கு சுகாதாரம் தொடர்பான மறுவாழ்வு சேவைகளை வழங்குதல்.

21.**நந்திவரம்**

- நந்திவரத்தில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், டயாலிசிஸ் மையம்

தொடங்கப்பட்ட மாநிலத்தின் முதல் PHC ஆனது.

22. **தமிழ்நாடு போலீஸ் கமிஷன்**
- முதல் போலீஸ் கமிஷன்-கோபாலசாமி (1969)
- இரண்டாவது காவல் ஆணையம் - சபாநாயகம் (1989)
- மூன்றாவது காவல் ஆணையம் - பூர்ணலிங்கம் (2006)
- நான்காவது காவல் ஆணையம் - ஷீலா பிரியா (2019)
- ஐந்தாவது காவல் ஆணையம் - சி.டி. செல்வம் (2022)

23. **ராணி மா கைடின்லியு விருது**
- திருச்சியைச் சேர்ந்த ரங்கோலி மற்றும் தஞ்சாவூர் ஓவியங்களில் புகழ்பெற்ற நிபுணரான மங்கலம் சீனிவாசனுக்கு ராணி மா கைடின்லியு விருது வழங்கப்பட்டுள்ளது.

24. **சோலிகா பழங்குடியினர்**
- பழங்குடியின காடுகளில் வசிக்கும் மக்களின் குழு பெரும்பாலும் தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் காணப்படுகிறது.
- "சோலிகா" என்ற வார்த்தையின் நேரடி அர்த்தம் "மூங்கிலின் குழந்தைகள்" என்பதாகும்.
- அவர்கள் பிலிகிரி ரங்கனா மலைகள் மற்றும் மலே மகாதேஸ்வர மலைகளுக்கு அருகிலுள்ள புற வனப்பகுதிகளில் வசிக்கின்றனர்.
- புலிகள் காப்பகத்திற்குள் வாழ்ந்து 2011 ஆம் ஆண்டு நீதிமன்ற தீர்ப்பில் தங்கள் வன உரிமைகளை அங்கீகரித்த முதல் பழங்குடி சமூகம் சோலிகாஸ் ஆகும்.
- சோலிகா பழங்குடியினரின் மொழி: சோலிகா மக்களால் திராவிட மொழியான சோலிகா பேசப்படுகிறது. அவர்கள் கன்னடம் மற்றும் தமிழையும் பேசுகிறார்கள்.

## சர்வதேச நிகழ்வுகள்

1.**எபோலா**:
- உலக சுகாதார அமைப்பு (WHO) உகாண்டாவில் சூடான் இனத்தில் இருந்து வரும் எபோலா நோய்க்கான தடுப்பூசி சோதனையைமுதன்முதலில் தொடங்கியுள்ளது.
- காரணம்:ஆர்த்தோபொலாவைரஸ் (முறையாக எபோலா வைரஸ்) எனப்படும் வைரஸ்களின் குழு.

பரவுதல்:
- டெரோபோடிடே குடும்பத்தைச் சேர்ந்த பழ வௌவால்கள் இயற்கையாகவே எபோலா வைரஸின் புரவலன்கள் என்று கருதப்படுகிறது.
- பழ வௌவால்கள், சிம்பன்சிகள், கொரில்லாக்கள், குரங்குகள், காட்டு மான்கள் அல்லது நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த அல்லது மழைக்காடுகளில் காணப்படும் முள்ளம்பன்றிகள் போன்ற பாதிக்கப்பட்ட விலங்குகளின் இரத்தம், சுரப்புகள், உறுப்புகள் அல்லது பிற உடல் திரவங்களுடன் நெருங்கிய தொடர்பு மூலம் எபோலா மனித மக்களிடையே பரவுகிறது.
- பின்னர் பாதிக்கப்பட்ட நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த நபரின் உடல் திரவங்களுடன் நேரடி தொடர்பு மூலம் எபோலா மனிதனுக்கு மனிதனுக்கு பரவுகிறது.

2.**திரியா நகரம்**
- சவூதி அரேபியா திரியா நகரத்தை உருவாக்குகிறது, இது "பூமியின் நகரம் திரியாஹ்" என்று அறியப்படுகிறது

3.**61வது முனிச் பாதுகாப்பு மாநாடு**
- ஜெர்மனியில் நடைபெறும் 61வது முனிச் பாதுகாப்பு மாநாடுநடந்தது

4. **வானவில் தலைநகரம்**

- ஹவாய் நகரம் உலக வானவில் தலைநகரமாக அழைக்கப்படும்

5.**8வது இந்தியப் பெருங்கடல் மாநாடு**

- ஓமன் தலைநகரமான மஸ்கட்டில் 8வது இந்தியப் பெருங்கடல் மாநாடு நடைபெற்றது.

6. **OPEC+**

- பிரேசில் சமீபத்தில் OPEC+ இல் பார்வையாளராக இணைந்தது.
- சமீபத்தில் அங்கோலா வெளியேறியுள்ளது.
- தொடர்புடைய செய்திகள்
- பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு என்பது ஈரான், ஈராக், குவைத், சவுதி அரேபியா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளால் 1960 ஆம் ஆண்டு பாக்தாத் மாநாட்டில் உருவாக்கப்பட்ட ஒரு நிரந்தர, அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- உலக சந்தையில் எண்ணெய் விலையை நிர்ணயிக்கும் முயற்சியில் எண்ணெய் விநியோகத்தை நிர்வகிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது
- ஆஸ்திரியாவின் வியன்னாவில் தலைமையகம் அமைந்துள்ளது

7.**UN மனித உரிமைகள் கவுன்சில்**

- மனித உரிமைகள் கவுன்சில் என்பது ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்குள் உள்ள ஒருஅரசுகளுக்கிடையேயான அமைப்பாகும், இது உலகெங்கிலும் உள்ள மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பாகும்.
- கவுன்சில் 2006 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் உருவாக்கப்பட்டது.
- இது முன்னாள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தை மாற்றியது.
- மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR) மனித உரிமைகள் பேரவையின் செயலகமாக செயல்படுகிறது.
- OHCHR இன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ளது.

8. **கோல்டு கார்டு திட்டம்**

- அமெரிக்கா ஒரு புதிய குடியேற்றத் திட்டத்தை அறிவித்துள்ளது, கோல்ட் கார்டு, இது பணக்கார வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு 5 மில்லியன் டாலர் (தோராயமாக ரூ. 43 கோடி) முதலீட்டிற்கு அமெரிக்க குடியுரிமையை விரைவாகப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது

9.**அமெரிக்க குடியுரிமை**

- ஹன்னா ஆரண்ட்ட் இன் வார்த்தைகளில், குடியுரிமை என்பது 'உரிமைகளைப் பெறுவதற்கான உரிமை'.
- 'ஜஸ் சோலி' கொள்கையின் அடிப்படையில் குடியுரிமை வழங்குவதை அமெரிக்கா நடைமுறைப்படுத்துகிறது.
- 1868 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க அரசியலமைப்பின் 14 வது திருத்தம், "அமெரிக்காவில் பிறந்த அல்லது குடியுரிமை வழங்கப்பட்ட அனைத்து நபர்களும், மற்றும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடிமக்கள்

## பொருளாதாரம்

1.**ரெப்போ விகிதம்:**

- ரெப்போ விகிதம்: ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) ஆறு உறுப்பினர்களைக் கொண்ட நிதிக் கொள்கைக் குழு (எம்பிசி) ரெப்போ விகிதத்தைக் குறைத்தது

- மற்ற வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடன் விகிதம் - 25 அடிப்படை புள்ளிகள் அதிகரித்து 6.25 சதவீதம்

  ரெப்போ விகிதம் என்றால் என்ன?
- ரெப்போ விகிதம் என்பது அரசாங்கப் பத்திரங்களுக்கு ஈடாக வணிக வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி குறுகிய கால நிதியை வழங்கும் வட்டி விகிதமாகும்.

- இதுபணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், ஒட்டுமொத்த பொருளாதாரநடவடிக்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கும் ரிசர்வ் வங்கிக்கு ஒரு முதன்மை கருவியாகச் செயல்படுகிறது.

- ரெப்போ விகிதத்தை சரிசெய்வதன் மூலம், ரிசர்வ் வங்கி வங்கிகள் அதிகமாகக் கடன் வாங்க ஊக்குவிக்கலாம் (விகிதத்தைக் குறைப்பதன் மூலம்) அல்லது கடன் வாங்குவதைத் தடுக்கலாம் (விகிதத்தை உயர்த்துவதன் மூலம்), இதனால் பொருளாதாரத்தில் பண விநியோகத்தில் செல்வாக்கு செலுத்தலாம்.

2.**இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) - மித்ரா**
- மியூச்சுவல் ஃபண்ட் முதலீட்டுத் தடமறிதல் மற்றும் மீட்டெடுப்பு உதவியாளர் எனப்படும் புதிய டிஜிட்டல் தளம், முதலீட்டாளர்கள் செயலற்ற அல்லது உரிமை கோரப்படாத மியூச்சுவல் ஃபண்ட் ஃபோலியோக்களைக் கண்காணித்து மீட்டெடுப்பதில் உதவுகிறது.

3.**புதிய வருமான வரிவிதிப்பு முறை**
- புதிய வருமான வரிவிதிப்பு முறையின் கீழ் தனிநபர் வருமான வரி விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு ரூ.7 லட்சத்தில் இருந்து ரூ.12லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- நடுத்தரவகுப்பினருக்கு நிவாரணம் அளிக்கும் இந்த அறிவிப்பை, 2025-26-ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் நிதியமைச்சர் வெளியிட்டார்.

4.**வருமான வரி சீர்திருத்தங்கள் திருக்குறள் மேற்கோள்**

'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி"

அதிகாரம்: செங்கோன்மை

பொருள்

'மழையை நம்பியே உலகின் உயிர்கள் எல்லாம் வாழும்; அதேபோல், குடிமக்கள் அனைவரும் மன்னனின் நேர்மையான ஆட்சியை எதிர்பார்த்து வாழ்வர்' என்பதாகும்.

## அரசியலமைப்பு

1.**குடியரசுத்தலைவர் ஆட்சி**
- அண்மையில் மணிப்பூர் மாநிலத்தில் குடியரசுத்தலைவர்ஆட்சி அமல்படுத்தப்பட்டது.
- மணிப்பூரில் 11வது முறையாக குடியரசுத்தலைவர்ஆட்சி அமல்படுத்தப்பட்டது

  தொடர்புடைய செய்திகள்
- மாநில நெருக்கடி நிலை விதி 356-ன்படி இந்தியாவில் முதல் முறையாக பஞ்சாப் மாநிலத்தில் 1951-ல் குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

2. **அதிக பெண் எம்.பி. க்கள்**
- 18வது மக்களவையில் 74 பெண் எம்.பிக்கள் உள்ளன.
- 11 பெண் எம்.பி. க்களுடன், மேற்கு வங்கத்தில் அதிக பெண் எம்.பி.க்கள் உள்ளனர்.

- தமிழ்நாட்டில் ஐந்து பெண் எம்.பி.க்கள் உள்ளனர்.
- தொடர்புடைய செய்திகள்
- அரசியலமைப்பு (106வது திருத்தம்) சட்டம், 2023, மக்களவை, மாநில சட்டமன்றங்கள் மற்றும் தேசிய தலைநகர் பிரதேசமான டெல்லியின் சட்டமன்றத்தில் உள்ள மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் SC மற்றும் ST களுக்கு ஒதுக்கப்பட்டவை அடங்கும்.

3.**பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு குறியீட்டில்**

